Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC . No. 400/2024
DEPOSITION OF ACCUSED SIDE WITNESS -2

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜ்குமார் | Calling: | டிரான்ஸ்போர்ட் வியாபாரம் |
| Father's Name: | சூரப்பன் | Religion: | |
| Village: | கத்தாரி | Age: | 42 |
| Taluk: | நாட்றம்பள்ளி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 18.04.2026 நேரம் : 02.47 PM

( புகார்தாரர் ஆஜர்.)

எ.சா. 2 முதன்மை விசாரணை

புகார்தாரரை தெரியும். நான் புகார்தராரரிடம் கடந்த 2016 லிருந்து 2023 வரை சீட்டுக்கட்டி வந்தேன். புகார்தாரர் தர்மலிங்கம் என்பவர் மூலம் தான் எனக்கு அறிமுகம் ஆனார். நான் 2016 ல் ரூ. 5 லட்சம் மற்றும் ரூ.2 லட்சம் சீட்டை போட்டேன். அந்த சீட்டிற்கு மாதம் மாதம் ரூ.12,500 மற்றும் ரூ.5,000 ஒரு சீட்டிற்கும் மாதம் மாதம் செலுத்திவந்தேன். நான் 2019 ல் சீட்டு எடுத்தேன். அதற்கு புகார்தாரர் மூன்று வெற்று காசோலைகளும் என்னுடைய நிலத்தின் அசல் பத்திரித்தையும் பிணையமாக பெற்றுக்கொண்டார். அதன்பிறகு 2020 ம் காலக்கட்டத்தில் கொரானா ஏற்பட்டதால் மீதுமுள்ள சீட்டுகளை என்னால் கட்டமுடியாது. அதற்கு தர்மலிங்கம் மற்றும் புகார்தாரரும் என்னை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவைத்து 19.04.2021 ம் தேதி அடைமானம் போட்டார்கள். என்னை கையெழுத்து மட்டும் செய்யசொன்னார்கள். எதற்காக என்று தெரியவில்லை. மீதமுள்ள ஐந்து சீட்டுகளில் இரண்டு சீட்டுகளை கட்டிவிட்டேன். மூன்று

சீட்டுகள் மீதம் இருந்தது. அதற்கு அவர் பலமடங்கு வட்டிப்போட்டு என்னிடம் பணம் கேட்டார். அவ்வளவு தொகையை என்னால் கொடுக்கமுடியாது என கூறினேன். நான் கொடுத்த மூன்று காசோலைகளையும் மற்றும் என் சொத்தின் மீது போட்ட அக்ரிமண்ட்யையும் வைத்து வழக்கு தாக்கல் செய்தார். முதலில் STC 546/2023 09.03.2022 ல் ரூ.5,00,000 வாங்கியதாக கூறி தர்மலிங்கத்தை வைத்து காசோலை வழக்கு தாக்கல் செய்தார். பிறகு OS 121/2024 என்ற எண்ணில் என் மீது அக்ரிமண்ட் வழக்கு போட்டார்.அதில் நான் 19.04.2021 ல் ரூ.2,50,000 வாங்கியதாகவும் பொய்யாக அந்த வருடத்தில் மட்டும் ரூ.7,50,000 கொடுத்ததாக பொய்யாக வழக்கு போட்டுள்ளார். பிறகு STC 400/2024 பூபதி 28.06.2023 ல் ரூ.4 லட்சம் கொடுத்ததாகவும் மற்றும் மூன்று மாதத்திற்குள் திருப்பி தரவேண்டும் என்ற நிபந்தனையில் கொடுத்ததாகவும் கூறி பின்பு STC 401/2024 11.09.2023 ல் ரூ.4,50,000 கொடுத்தாகவும் அதை போல் மூன்று மாத்திற்குள் திருப்பி தரவேண்டும் என்ற நிபந்தனையில் கொடுத்ததாகவும் கூறி என் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்தார். இதை தவிர 03.12.2023 ரூ.6,00,000 கொடுத்ததாகவும் மற்றொன்று 31.12.2023 ரூ.5,00,000 கொடுத்ததாகவும் புரோநோட்டை வைத்து என்மீது தவறான லீகல் நோட்டிஸ் 04.03.2024 அன்று அனுப்பியுள்ளார். இந்த வருடத்தில் மட்டும் எனக்கு பூபதி ரூ.19,50,000 கொடுத்ததாக பொய்யாக வழக்கு மற்றும் லீகல் நோட்டிஸ் அனுப்பியுள்ளார். பூபதி செல்வந்தர் அல்ல, பென்சன் மூலம் ஜீவன் நடத்துவார். அவர் இரயில்வேயில் ஆபிசராக வேலை செய்துவந்தார். வருமானத்திற்கு வருமான வரிக்கட்டுவார். அவருக்கு மூன்று வங்கி கணக்குகள் உள்ளதால் பணத்தை அந்த வங்கிக்கணக்குகளுக்குதான் அனுப்ப சொல்லுவார். வருமான வரிக்கட்டி வருவதாகவும் கூறினார். ஆனால் எனக்கு பணம் கொடுத்திருந்தால் வருமான வரிக்கட்டி இருப்பார். வங்கிகணக்குகளை பார்த்தால் நான் அவருக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்ற விவரம் தெரியும். என்னை தவிர இதே நீதிமன்றத்தில் பத்து நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். பாலு என்பவர் மீது இரண்டு வழக்குகளும், கோவிந்தராஜ், சுதாகர், அனிதா, என் மீது முன்று வழக்குகளும் தாக்கல் செய்துள்ளார். இந்த அனைத்து வழக்குகளும் சீட்டுக்காக கொடுத்த காசோலையை வைத்து தான்தாக்கல் செய்துள்ளார். இதற்கான ஆதாரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 04.03.2024 ல் ரூ.6 லட்சத்திற்கான புரோநோட் சட்ட அறிவிப்பு எனக்கு அனுப்பினார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. **அந்த புரோநோட் வழக்கறிஞர்**

**சட்ட அறிவிப்பு எ.ம.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதற்கு நான் 16.03.2024 ல் பதில் அறிவிப்பு அனுப்பினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. **அந்த பதில் அறிவிப்பு எ.ம.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த அறிவிப்பை புகார்தாரரின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டை தான் அது. **அந்த அஞ்சல் ஒப்புகை அட்டை எ.ம.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 04.03.2024 ல் ரூ.5 லட்சத்திற்கான புரோநோட் சட்ட அறிவிப்பு எனக்கு அனுப்பினார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. **அந்த ரூ.5 லட்சத்திற்கான புரோநோட் வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு எ.ம.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதற்கு நான் 16.03.2024 ல் பதில் அறிவிப்பு அனுப்பினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. **அந்த ரூ.5 லட்சத்திற்கான பதில் அறிவிப்பு எ.ம.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த அறிவிப்பை புகார்தாரரின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டை தான் அது. **அந்த அஞ்சல் ஒப்புகை அட்டை எ.ம.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** STC 335/2024 ல் என்ற வழக்கை பாலு என்பவர் மீது தாக்கல் செய்துள்ளார். அது சம்மந்தமான ஆவணம் என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. அந்த STC 335/2024 ல் என்ற வழக்கின் ஆவணம் **எ.ம.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** STC 337/2024 ல் என்ற வழக்கை கோவிந்தராஜ் என்பவர் மீது பூபதி தாக்கல் செய்துள்ளார். அது சம்மந்தமான ஆவணம் என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. அந்த STC 337/2024 ல் என்ற வழக்கின் ஆவணம் **எ.ம.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** STC 402/2024 ல் என்ற வழக்கை பாலு என்பவர் மீது பூபதி தாக்கல் செய்துள்ளார். அது சம்மந்தமான ஆவணம் என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. அந்த STC 402/2024 ல் என்ற வழக்கின் ஆவணம் **எ.ம.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதுப்போன்று சீட்டுக்காக கொடுத்ததை வைத்து அனைவரின் மீதும் வழக்கு தாக்கல் செய்துவருகிறார். நான் 28.06.2023 ல் மூன்று மாதத்தில் கொடுக்ககூடிய பணத்தையே திருப்பி தராதபோது என்னை நம்பி ரூ.27,00,000 ஐ எப்படி தந்திருப்பார்?.அதனால் அவர் என்மீது தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கு தள்ளுபடி ஆகவேண்டியது ஆகும்.

(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராஜ்குமார்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.04.18 17:26:28 +0530